# டாக்டர் வா.செ.கு. கல்வி மற்றும் ஆய்வு அறக்கட்டளை பத்தாம் ஆண்டு விழா, 20.07.2008

## தலைமை உரை, டாக்டர் வா.செ. குழந்தைசாமி

இந்த அறக்கட்டளையின் தலைவர் என்ற பொறுப்பில் இருப்பவர்கட்குச் சில சலுகைகள் உண்டு. ஒரு கூட்டத்தில் தலைவர் உரை என்று முதலிலும் பேசலாம். தலைவர் இறுதியிலும் பேசலாம். நான் தலைவர் உரை என்ற முதற் பகுதியில் இதில் பேச இருக்கும் விருந்தினர்களை அறிமுகப்படுத்துவது முறை என்று கருதுகிறேன்.

துவக்க உரை நிகழ்ந்த இருப்பவர் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேரா. பொன்னவைக்கோ, சிறந்த ஆராய்ச்சியாளர், கல்வியாளர். இந்தியாவில் மைய அரசிலும், வெளிநாட்டிலும், தமிழகத்தில் பல கல்வி நிறுவனங்களிலும் முக்கியமான பொறுப்புகளை வகித்தவர். துணைவேந்தர் தகுதியில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இயக்குநராக இருந்தவர். என்னைப் பொருத்தவரை இவை எல்லாவற்றிலும் முக்கியமாக அவர் என் மாணவர்.

ஒரு முக்கியமான அரசியல் தலைவர் ஒருவர் டாக்டர் பொன்னவைக்கோ அவர்களைப் பற்றி என்னிடம் கருத்துக் கேட்டார். இன்றைய கல்வி உலகம் அங்குள்ள நாணயம் பற்றி நீங்கள் அறிவீர்கள், அரசியல் உலகம், அதன் நேர்மை பற்றி நீங்கள் அறிவீர்கள், அதிகாரிகளைப் பற்றியும் நாம் எதுவும் பெருமையாகச் சொல்வதற்கில்லை. இந்தச் சூழ்நிலையில் தான் அவரிடம் கூறினேன். டாக்டர் பொன்னவைக்கோ அவர்களைப் பற்றி நான் ஒரு வரியில் சொல்வதனால் டாக்டர் பொன்னவைக்கோ கோடி கொடுத்தாலும் குனியாதவர்; கோடி கொடுத்தும் குனிய வைக்க முடியாதவர்.

குற்றமிலா வாழ்வு நெறி குறித்ததொன்று
கூனாது குனியாது வாழ்ந்த தொன்று

*   *   *   *

இமயம் தான் முடிவுடையது என்பதில்லை
எழுந்துயரும் குன்றுக்கும் சிகரம் உண்டு

அமர்கின்ற பதவியில உரைகல்: வாழ்வில்
அவர்அவர்தம் நிலை தாழார் அரசர் என்போம்
தன்பணியில் சிறந்தார் முன் தலை பணிந்தோம்
தரமுடையர் தாழ்வதிலை – நிமிர்ந்து நிற்கும்

என்புடையர் மானிடர்தம் ஏணி

என்பத கவிஞன் வாக்கு. பொதுவாகப் பதவியில் இருப்பவர்கள் கூனியும், குனிந்தும் வாழ்க்கை நடத்துவது மரபாகிப் போய்விட்ட இந்தியத் திருநாட்டின் சூழ்நிலையில் தன்னிலை தாழாது நிற்கும் கல்வி அரசராகக் காட்சி அளிப்பவர் டாக்டர் பொன்னவைக்கோ. அவர் என் மாணவர் என்று பிரகடனப்படுத்துவதில் பெருமை கொள்கிறேன்.

அடுத்து முன்னிலை உரை வழங்க இருக்கும் திரு. குப்புசாமி அவர்களும், திரு. பொன்குமார் அவர்களும் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் இந்த மாவட்டத்தில் பணிபுரிபவர்கள் அவர்களை நீங்கள் அறிவீர்கள். இது என்னை விட அவர்களுடைய விழா என்று கூறுவது மிகவும் பொருந்தும். எனவே அவர்களைப் பற்றி நான் அதிகம் கூற வேண்டுவதில்லை.

அடுத்து வருபவர் பேரா. அருணன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிபவர் பொதுவாகப் பேராசிரியர் என்பவர்கள் பெரும்பாலும் பாடம் கற்பிப்பவர்கள் அதற்கு மேல் போனால் மேடைகளில் சொற்பொழிவாற்றுபவர்கள், தமிழ்ப் பேராசிரியராக இருந்தால் பெரும்பாலும் பட்டிமன்றத்தில் பங்கேற்பவர்கள் என்ற அளவில் தான் அறிமுகமாகியிருப்பார்கள். பேரா. அருணன் அவர்கள் இவற்றிற்குச் சற்று மாறாகச் சிறந்த ஆய்வாளர். சற்றுச் சிந்தனையாளர், கடினமான தலைப்பில் தமிழர்களின் மெய்யியல் தத்துவம் என்பது பற்றி ஆய்ந்து ஓர் சிறந்த ஆய்வுப் படைப்பை, பங்களிப்பை அளித்திருக்கிறார். இந்தச் சமயத்தில் நான் அவரை அறிமுகப்படுத்துவதுடன் அவருக்கு பாராட்டுத் தெரிவிப்பதும் கடமையாகும்..

இறுதியாக வருபவர் என் நண்பர் சைதை துரைசாமி. இந்த மேடைக்கு அவர் புதியவர் ஆனால் அவர் இந்த ஊர்க்காரர். இந்த ஊர்க்காரர் என்பதைவிட என்னைப் பொருத்தவரை அவர் இன்னும் சற்று எனக்கு நெருக்கமானவர். நான் பிறந்த கிராமத்தில் எங்கள் வீட்டிற்கு அடுத்தது எங்கள் தோட்டம். அந்தத்தோட்டத்தைத் தாண்டினால் அடுத்து வருவது அரிக்காரம்பாளையம் என்ற சிற்றூர். அந்த அரிக்காரம்பாளையம் தான் நண்பர் சைதை துரைசாமி அவர்களின் தாயாருடைய சொந்த ஊர். எனவே அவர் இந்த விழாவிற்கு ஒரு விருந்தினர் அல்ல. ஒரு வகையில் இந்த விழாவுக்குச் சொந்தக்காரர். சொந்தம் கொண்டாடும் உரிமைப் படைத்தவர்.

சைதை துரைசாமி அவர்கள் அரசியல்வாதியாக இருந்தவர். சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருந்தவர். அது பழைய வரலாறு. என்னைப் பொறுத்தவரை அவர்

ஒரு தலைசிறந்த கல்வி வள்ளல். வள்ளல் என்று நான் அளந்து தான் கூறுகிறேன். அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

பொதுவாக இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஆட்சியில் இருப்பவர்கள் ஆளுநர், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள், முதலமைச்சர் போன்றவர்கள் என்றாலும் உண்மையில் அரசை நடத்துபவர்கள். நிர்வாகம் என்று வரும்பொழுது மிகிஷி அதிகாரிகள். பாதுகாப்பு என்று வரும்பொழுது, சட்டம், ஒழுங்கு என்று வரும் பொழுது மிறிஷி அதிகாரிகள். இவர்கள் மாநிலத்தில் பணிபுரிந்தாலும் மைய அரசால் நியமிக்கப்படுபவர்கள். இந்தப் பொறுப்புகட்குத் தமிழகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்தே வருகிறது என்பது வருந்தத்தக்கது. அதில் நம்மவர்கள் பங்கை உயர்த்த வேண்டும் என்பதற்காகப் பொறுப்புள்ளவர்கள் அனைவரும் கவலை தெரிவித்து வருகிறார்கள். திரு. சைதை துரைசாமி அவர்கள் வெறும் மேடைப் பேச்சாளி அல்லர்: செயல் வீரர். **மனித நேய அறக்கட்டளை** என்று ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் 100 மாணவர்களுக்கு சாதி பார்க்காது, மதம் பார்க்காது தமிழர்கள் என்ற ஒரு தகுதியோடு தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இலவசமாக உணவு, இலவசமாகத் தங்கும் இடம் பாடம், நடத்துவதற்கான கல்வி நிலையம், ஆசிரியர்கள் அனைத்தையும் அவருடைய அறக்கட்டளையின் கீழ் நடத்தி வருகிறார்.

100 பேர் என்று சொன்னேன். இந்த 100 பேரும் ஏதோ தனக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்து வசதி செய்து கொடுக்கப்பட்டவர்கள் அல்லர். இதற்காக ஒரு போட்டித் தேர்வு நடத்தினார் அதில் 1000 பேர் தேர்வு எழுதினார்கள். நான் சென்று அந்தத் தேர்வைத் தொடங்கி வைத்தேன். அந்தத் தேர்வின் அடிப்படையில் அந்த 1000 பேரிலிருந்து 100 பேரைத் தேர்ந்தெடுத்தார். அவர்கட்கு வகுப்புகள் நடத்திப் பாடம் கற்பித்தார். அவர் அனுப்பிய முதல் முதலாக மாணவர்கள் குழுவிலிருந்து அந்த முயற்சியிலேயே 17 பேர் வெற்றி பெற்றியிருக்கிறார்கள். இது மாபெரும் சாதனை என்று எல்லாப் பத்திரிக்கைளும் வரவேற்று இருக்கின்றன. இந்த ஆண்டு போட்டித் தேர்வில் 2100 பேர் கலந்து கொள்கிறார்கள். 7 இடங்களில் தேர்வு நடத்துகிறார். இன்று தேர்வு கரூரில் நடக்கிறது.

இது மட்டுமல்லாது பொறியியல், மருத்துவம் படிக்கும் 1100 மாணவர்கட்கு உதவித் தொகை வழங்குகிறார்.

இந்த வாரம் குமுதம் ரிப்போட்டரில் சோலை என்ற எழுத்தாளர் அவரை பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

சைதை துரைசாமி அமரர் எம்.ஜி.அவரால் அடையாளம் காட்டப்பட்டவர், அறிமுகமானவர். அற்புதமான செயல்வீரர். இன்றைக்கு அவருடைய சமூகப் பணிகள் அவரை உலகிற்கு அறிமுகம் செய்து கொண்டிருக்கின்றன. சாமானிய மக்களுக்காக அவர் இலவசமாக நடத்தும் மிகிஷி பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு மட்டும் 12 பேர் தேர்வு பெற்றனர். இதனை மகத்தான சாதனை அன்று இந்தியாவே கொண்டாடுகிறது.

இந்தியாவே கொண்டாடும் சாதனையாளரான சைதை துரைசாமி அவர்களை அவருடைய சொந்த மாவட்டமான கரூரில் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே இந்தகூட்டத்திற்கு அவரை அழைக்குமாறு ஏற்பாடு செய்தேன். அவரைப் பாராட்டுவதில் அவருடைய தாயார் ஊரான அரிக்காரம்பாளையத்திற்கு அடுத்த ஊரான வாங்காலம்பாளையத்துக்காரன் என்ற அளவில் எனக்குப் பெருமையும் உண்டு, அவரைப் பாராட்டும் உரிமையும் உண்டு. என் பெயரில் கரூரில் உள்ள எனது நண்பர்கள் முயற்சி எடுத்து நடத்தி வரும் இந்த அறக்கட்டளையின் ஆண்டு நிகழ்ச்சிகளில் அவருக்கும் பங்கும் உண்டு.

இன்றைய விழா அறக்கட்டளையின் 10–ஆவது ஆண்டு விழா. அறக்கட்டளையின் சார்பில், அடையாளம் தெரியாத குடும்பங்களிலிருந்து அவ்வளவாக வசதியும், வாய்ப்பும் இல்லாத சூழ்நிலைகளில் படித்து 10–ஆவது வகுப்பிலும், 12–ஆவது வகுப்பிலும் அவர்அவர் பள்ளியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்களையும், மாவட்ட அளவில், மாநில அளவில் சிறப்பாகத் தேறிய மாணவர்களையும் பாராட்டி அவர்கட்குச் சான்றிதழ் வழங்கிப் பதக்கம் அணிவிப்பது இவ்விழாவின் நோக்கம். இந்த மாவட்டத்தில் இந்த ஆண்டு கல்வியில் முதலிடம் பெற்ற 400 மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் பெருமக்கள் சிலரும் இங்கு கூடியிருக்கிறார்கள். **இது ஒரு சாதாரணக் கூட்டம் அல்ல. சாதனையாளர்கள் கூட்டம். எதிர்காலத்தில் சாதிக்கப் போகும் தமிழக இளைஞர்களின் கூட்டம்.** இவர்களிலிருந்து தான் நாளைய மருத்துவர்கள் வரப் போகிறார்கள், பொறியியல் வல்லுநர்கள் வரப்போகிறார்கள். சைதை துரைசாமி அவர்களே! உங்கள் மனித நேய அறக்கட்டளையின் மிகிஷி, மிறிஷி தேர்வர்கள் வரப் போகிறார்கள்! அவர்களை முளையிலேயே அடையாளம் கண்டு பாராட்டி ஊக்குவிப்பது தான் இந்த நிகழ்ச்சியின் முக்கியமான குறிக்கோள். என்னளவில் இது ஒரு புனிதமான கல்விப் பணி.

பாராட்டை மிஞ்சியொரு பரிசில் இல்லை
பணம் பதவி எதுவும் அதற்கு இணையுமில்லை

*    *    *    *

**தக்காரை மனம் திறந்து போற்று நாடு**

தகுதியினை வளர்க்கின்ற கழனி: ஆற்றல்

மிக்கரால் உயர்வதடா மனித சாதி

வேதமிது விதியுமிது விலக்கொன்றில்லை

என்பான் கவிஞன். எனவே இந்தப் பாராட்டு நிகழ்ச்சி, ஒரு புனிதமான நிகழ்ச்சி சாதனை செய்தவர்கள் மட்டுமல்ல: எதிர்காலத்தில் சாதிக்கப் போகிறவர்களைப் பாராட்டும் விழா. இது ஒரு திருமண மண்டபத்தில் நடப்பதை விட ஒரு கல்லூரி வளாகத்தில் நடக்க வேண்டும். இந்த மாணவர்கள் தாங்கள் எதிர்காலத்தில் படிக்க இருக்கும் கல்லூரி வளாகங்கள் எப்படியிருக்கும் என்று அடையாளம் காண வேண்டும். அதே சமயத்தில் அந்தக் கல்லூரி அந்த மாணவர்கட்கும், அவர்களோடு கூட வரும் பெற்றோர்கட்கும் அறிமுகமாக வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த விழாக் கல்லூரியில் நடப்பதற்காக ஏற்பாடு செய்தோம். என்ன காரணத்தாலோ அது தொடரவில்லை. இந்த விழாவிற்காக எப்பொழுதும் மனமுவந்து முழுமனத்துடன் தாங்களாகவே முன் வந்து இந்த மண்டபத்தைப் பல ஆண்டுகளாக அளித்து வரும் உத்தமி திருமண மண்டப உரிமையாளர்கட்கு, நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.